பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
14 10 2024 **MONDAY** 6 45 **AM**
வணக்கம். மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இந்தியாவும் - அல்ஜீரியாவும் நீண்டகால நல்லுறவை கொண்டுள்ளதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. கைத்தறி மற்றும் நெசவுத் தொழிலை பாதுகாப்பதற்கு மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

3. வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார.

4. தமிழகத்தில், 10, 11, 12ஆம் வகுப்புகளுக்கான பொதுத்தேர்வு அட்டவணை இன்று வெளியிடப்படுகிறது.

5. தேசிய சீனியர் மகளிர் ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டிகள் புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

>>>>>><<<<<<

இந்தியாவும் - அல்ஜீரியாவும் நீண்டகால நல்லுறவை கொண்டுள்ளதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

மூன்று ஆப்பிரிக்க நாடுகளில் ஏழு நாள் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள அவர், முதல்கட்டமாக **Algeria** சென்றடைந்தார்.

அங்குள்ள விமான நிலையத்தில் அவரை அந்நாட்டு அதிபர் திரு. **Abdelmadjid Tebboune** வரவேற்றார்.

பின்னர், இந்திய வம்சாவளியினர் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் பேசிய அவர், நாட்டின் வளர்ச்சிக்கு வெளிநாடு வாழ் இந்தியர்கள் முக்கியப் பங்காற்றி வருவதாக கூறினார்.

அல்ஜீரியாவின் சுதந்திரத்திற்காக பாடுபட்டு, உயிர்த்தியாகம் செயதவர்களின் நினைவிடத்திற்கு சென்று மரியாதை செலுத்துகிறார்.

பின்னர் அந்நாட்டு அதிபர் மற்றும் உயரதிகாரிகளுடன் பரஸ்பரம் இருதரப்பு நல்லுறவு குறித்து பேச்சு நடத்துகிறார்.

இரண்டாவது கட்டமாக **Mauritania** செல்லும் அவர், அங்குள்ள இந்திய வம்சாவளியினரிடையே உரையாற்றுகிறார்.

இறுதிகட்டமாக **Malawi** செல்லும் அவர், அந்நாட்டுடன் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்புக்கான பேச்சுக்களை நடத்துகிறார்.

விளையாட்டு, இளைஞர் நலன் மற்றும் கலாச்சாரம் ஆகிய துறைகளில் இருநாடுகளுக்கும் இடையே மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>>><<<<<<**

கைத்தறி மற்றும் நெசவுத் தொழிலை பாதுகாப்பதற்கு மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டையில் நெசவாளர் கூட்டமைப்பினருடன் கலந்துரையாடிய அவர், நெசவாளர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

தேசியத்தையும், தெய்வீகத்தையும் போற்றுகிற கட்சியாக பிஜேபி உள்ளது என்றும், இவற்றை நாட்டின் நலனுக்காக பிரதமர் பயன்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமரின் ஜவுளிப் பூங்கா விருதுநகரில் அமையவிருப்பது, நெசவாளர்களின் நலனில் மத்திய அரசு அக்கறையுடன் செயல்பட்டு வருவதை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்று திரு. எல். முருகன் கூறினார்.

**>>>>>><<<<<<**

வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள ஏதுவாக, 39 கோடி ரூபாய் செலவில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை அடுத்த முட்டுக்காடு முகத்துவாரத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகளை நேற்று அவர் ஆய்வு செய்தார்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால் வாய்க்கால்களில் 200 கிலோமீட்டர் தொலைவிற்கு தூர்வாரும் பணிகள் நிறைவடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்வதற்கு தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பல்வேறு துறையைச் சார்ந்த அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தப்பட்டு, உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

அனைத்து கால்வாய்களையும் சீரமைக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மாவட்டத்தின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கரும்பு விவசாயிகளுக்கு மானியம் வழங்க, நடப்பாண்டு ஏழு புள்ளி ஒன்பது ஒன்று கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டையில் உள்ள சர்க்கரை ஆலையை ஆய்வு செய்த அவர்,

இந்த திட்டத்தின் மூலம் கரும்பு சாகுபடிக்கான பரப்பளவு, விதைக்கரும்பு, திசுவளர்ப்பு நாற்றுகள் போன்றவற்றுக்கு மானியம் வழங்க இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

தமிழகத்தில் 16 கூட்டுறவு, இரண்டு பொதுத்துறை, 22 தனியார் ஆலைகள் என 40 சர்க்கரை ஆலைகள் உள்ளதாகவும், நடப்பாண்டில் 95 லட்சம் மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

பின்னர் விவசாயிகள் மற்றும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய அமைச்சர், அவர்களது கோரிக்கை மனுக்களையும் பெற்றுக் கொண்டார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில், 10, 11, 12ஆம் வகுப்புகளுக்கான பொதுத்தேர்வு அட்டவணை இன்று வெளியிடப்படுகிறது.

இதனை மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெளியிடுகிறார்.

>>>>>><<<<<<

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும், ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகளுக்கான தேர்வுகள் இன்று தொடங்குகின்றன.

இந்த தேர்வுகள் வரும் 23ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

மாநிலம் முழுவதும் நடைபெறும் இந்த தேர்வை 95 ஆயிரத்து 925 பேர் எழுதுகின்றனர்.

கணினி வாயிலாக நடைபெறும் இத்தேர்வு மாநிலம் முழுவதும் 161 மையங்களில் நடைபெறுகிறது.

நேர்முகத் தேர்வு அல்லாத ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகளில் காலியாக உள்ள 654 இடங்களுக்கு இத்தேர்வு நடைபெறுகிறது.

>>>>>><<<<<<

ஒருமுறை மட்டும் பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பொருட்களை கொண்டு தயாரிக்கப்படும் லைட்டர்களுக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளதை தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கம் வரவேற்றுள்ளது.

தூத்துக்குடியில் செய்தியாளர்களிடம் பேசிய தேசிய தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்க செயலாளர் திரு. சேதுரத்தினம், மத்திய அரசின் இந்த நடவடிக்கைக்கு நன்றி தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - சேதுரத்தினம் 47 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

தெற்கு வங்கக்கடலின் மத்தியப் பகுதியில் இன்று காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி மேற்கு — வடமேற்கு திசையில் நகர்ந்து, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுவடையும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

அடுத்த 48 மணி நேரத்தில் இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி வடதமிழகம், புதுச்சேரி மற்றும் தெற்கு ஆந்திர கடற்பகுதிகளை நோக்கி நகரக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

தமிழகத்தின் பெரும்பாலான இடங்களில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, அடுத்த இரண்டு நாட்களில் வடகிழக்குப் பருவமழை தொடங்கக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

லெபனானில் உள்ள அமைதிப் படையை ஐநா விலக்கிக் கொள்ள வேண்டும் என்று இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹு கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா அமைப்பினர் நடத்திய ட்ரோன் தாக்குதலில் நான்கு இஸ்ரேலிய ராணுவ வீரர்கள் உயிரிழந்தனர்.

>>>>>><<<<<<

ஈரான் மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதார தடைக்கு அந்நாட்டு வெளியுறவு அமைச்சகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

தில்லியில் கடந்த 24 மணிநேரத்தில் கடும் காற்று மாசு ஏற்பட்டுள்ளதாக காற்று தர மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

தூத்துக்குடியில் நடைபெற்ற புத்தக கண்காட்சியில் ஒரு கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பிலான புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு. இளம் பகவத் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் உள்ள ராஜகோபால ஸ்வாமி கோவிலில் அம்பு விடும் வைபவம் நேற்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

>>>>>><<<<<<

திருப்பத்தூர் மாவட்டத்தில் காவல்துறையினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது, 452 கிலோ போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

தேசிய சீனியர் மகளிர் ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டிகள் புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

இதில் மொத்தம் 12 அணிகள் பங்கேற்கின்றன.

இந்தப் போட்டிகள் இம்மாதம் 21ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

>>>>>><<<<<<

உலக கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா 9 ரன் வித்தியாசத்தில் இந்தியாவை வென்றது.

சார்ஜாவில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் விளையாடிய ஆஸ்திரேலிய அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 151 ரன் எடுத்தது.

152 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு ஆடிய இந்தியா, 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 142 ரன் மட்டுமே எடுத்தது.

இன்று நடைபெறவுள்ள போட்டியில் பாகிஸ்தான் – நியூஸிலாந்து அணியை எதிர்கொள்கிறது.

துபாயில் நடைபெறவுள்ள இப்போட்டி இன்றிரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<<

ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் தமிழக அணி வலுவான நிலையில் உள்ளது.

கோவையில் நடைபெற்று வரும் இப்போட்டியில் சௌராஷ்ட்டிர அணி, மூன்றாம் நாளான நேற்று, இரண்டாவது இன்னிங்ஸில் ஆட்டநேர இறுதியில் 5 விக்கெட் இழப்புக்கு 35 ரன் எடுத்துள்ளது.

சௌராஷ்ட்டிர அணியின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 203 ரன்.

தமிழக அணியின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 367 ரன்.

>>>>>><<<<<<

கஜகஸ்தானில் நடைபெற்று வரும் **Almaty** ஓப்பன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டங்கள் இன்று நடைபெறுகிறது.

>>>>>><<<<<<